1968 பிப்ரவரி 20]

ஆசிரியர்களாகச் சேர்த்து அந்தத் தொழிலில் அவர்களுக்குப் பிரியம் இருக்கிறதா இல்லையா, தொடர்ந்து அவர் ஆசிரியராக இருக்க விரும்புகிறுரா, அது அவர்களுக்கு ஒத்துவருகிறதா என்று பார்த்து ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் பி.டி. பட்டம் பெருமல் ஆசிரியர்களாக இருந்த பிறகு அவர்களுக்கு பி.டி. பயிற்சி அளிக்கலாமா என்பது யோசனையில் இருக்கிறது. அப்போது பி.டி. படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிருர்கள் என்ற நிலை இருக்காது. அந்த இரண்டு ஆண்டுகளில் தெரிந்து விடும், இந்தத் தொழில் அவர்களுக்கு ஏற்றதா, இல்லையா என்பது சில பேர்கள் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் பயிற்சி பெற்று பி.டி. ஆகிய பின் பள்ளிக்குச் சென்ற பிறகு மாணவர்களுடன் பழகுவது, அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது பிடிக்காமல் விட்டு விட்டு வருகிற நிலைமையும் ஏற்படுகிறது. அப்படி பணத்தையும் வீணுக்கி, இடத்தையும் பாழாக்கிவிடுகிற நிலை கூட ஏற்படுகிறது. ஆகவே இதைக் குறித்து கலந்து ஆலோசிக்கும்படி இயக்குனர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : திருவண்ணுமலையில் ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு திருவண்ணுமலை, செங்கம் பகுதிகளிலுள்ள மாணவர்கள் அதில் படித்துவிட்டு மேல் படிப்பு படிக்க வசதியில்லாமல் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே அங்கு பி.எ. வகுப்பு ஆரம்பிக்க, வரப்போகும் கல்வி ஆண்டிலாவது அதை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோரிக்கை வந்திருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

திருமங்கலத்துக்கு தெற்கேயுள்ள பாலம்

* 82 வினு—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை-திருநெல்வேலி நெடுஞ்சாலையில், திருமங்கலத்தின் தெற்கே மிகவும் குறுகிய அகலம் உள்ளதாக அமைந்துள்ள ஆறுகண் பாலத்தை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள வலிவற்ற கட்டமைப்புகளை வலுப்படுத்தல், அகலப்படுத்தல் வேலைத் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து அந்தந்த ஆண்டில் கிடைக்கக் கூடிய நிதி ஒதுக்கத்தைப் பொறுத்து, அடுத்த நிலையில் இப்பணிகளை மேற்கொள்வது பற்றி ஆலோசிக்க முடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள இடத்தில் இந்தப் பாலம் அமைந்திருப்பதால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே அதை விரைவாக விரிவுபடுத்த முடியுமா?

[1968 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய அரசிடமிருந்து தேசிய நெடுஞ்சாலைகளுக்காக நாம் பெறுகிற தொகையிலிருந்து இந்த வேலைகளைச் செய்யமுடியும். அதில் முதல் கட்டமாக சென்னையிலிருந்து உளுந்தூர்பேட்டைக்குப் போகிற பாதையில் பலயிடங்களில் 25 லட்சம் ரூபாய் வரை செலவு செய்து வேலைகளை முடித்திருக்கிறோம். அதில் இதுவரை வந்திருக்கிற பணம் ரூ. 8 லட்சம்தான். இரண்டாவது கட்டமாக இந்த வேலை எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அதற்கான ஒதுக்கீடு வந்ததும் அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமங்கலத்துக்கு தெற்கேயுள்ள பாலம் என்பதுபற்றிய துணைக்கேள்விகளை மட்டும் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, arising out of the answer given by the Hon. Minister for Public Works with regard to the sharing of the amount between the Centre and the State, will the Hon. Minister tell us the ratio of assistance shared between the Central and State Governments and also the method adopted for that purpose. Now a number of bridges like the one on the Madras-Ponneri route is there without being widened. As the amount involved is not very much, will this Government, without waiting for the realisation of the amount from the Central Government, straightaway proceed with the work and get the amount adjusted later on?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் பங்குத் தொகை எவ்வளவு என்ற விவரங்கள் இல்லை. ஆனால் மாநில அரசு தேசிய நெடுஞ்சாலைகளில் சில நேரங்களில் வேலைகளை அநேகமாக செய்து முடித்துவிட்டு அதற்குப் பிறகு கூட மத்திய அரசிடமிருந்து அந்தப் பணத்தைப் பெறுகிறது.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்கு இரயில்பாதை இல்லாததால் அங்குள்ள தேசிய நெடுஞ்சாலைகள் அதிகமாகப் போக்குவரத்து உள்ளதாக இருக்கிறது. எனவே அந்த தேசிய நெடுஞ்சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அந்த ரோடுகளை அகலப்படுத்தவும், குறுகிய பாலங்களை விரிவுபடுத்தவும் அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது பேசப்படுகிற நெடுஞ்சாலை பற்றியுள்ள அந்தக் கட்ட வேலை நிறைவேறும் பொழுது இந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, நீண்ட காலத்திற்கு முன்னால் கட்டிய பாலங்கள் சிலசமயங்களில் விபத்துக்குள்ளாக நேரிடுகிறது. இப்படிப்பட்ட பாலங்களுக்கு குறிப்பிட்ட காலம் உழைக்கும் என்ற விதியை சர்க்கார் நிர்ணயிப்பது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1968 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவ்வப்பொழுது பொறியாளர்கள் அவைகளைக் கண்காணித்து பழுது இருந்தால உடனடியாக சீர்படுத்துவதற்கான காரியங்களில் ஈடுபடுகிறார்கள்.

திரு. டி. மார்டின்: அவைத் தலைவரவர்களே, நெடுஞ்சாலைகள், பாலங்கள் பாதுகாப்பிற்காக ஒவ்வொரு திட்டமாக சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரிடம் அனுமதி கேட்கிறதா அல்லது மொத்தத்தில் இங்கு பராமரிப்பதற்காக இவ்வளவு தொகை கொடுங்கள் என்று கேட்கிறதா என்பதோடு நெல்லை மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் இரயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள ஒரு பாலம் குறுகியிருப்பதால் அதைக்குறித்துத் தனியாக இந்த அரசு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேசிய நெடுஞ்சாலை பாதுகாப்பிற்காக 1967–68-க்கு 58 லட்சம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு கோரியுள்ளது. அவர்கள் தருவதில் ஒவ்வொரு திட்டமாக, ஒரு திட்டம் என்றால் 5, 6 பாலங்கள் அல்லது 10, 12 பாலங்கள் கட்டுமான, விரிவுபடுத்துதல் என்ற அளவிலே திட்டங்கள் எடுக்கப்படும். ஐம்பத்தெட்டு லட்சம் 1967–68-க்கு கேட்கப்பட்டது இன்னும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த தனிப்பட்ட பாலத்தைப்பற்றிய கேள்வி இதிலே வரவில்லை. அதுபற்றித் தனியாகக் கேட்டால் விவரங்கள் கொடுக்கப்படும்.

Pattanamkal Project

* 83 *Q.*—Thiru M. WILLIAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total estimated cost of Pattanamkal Project;

(*b*) whether a branch channel from near Karingal to Pallapallam be opened; and

(*c*) whether a branch channel will be constructed to cover Chemmuthal and other areas in Killiyoor village?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) பட்டினங்கால் திட்டம், சித்தாறு, பட்டினங்கால் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டம் முழுவதற்கும் ரூ. 7.33 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் பட்டினங்கால் திட்டத்திற்கு மட்டும் சுமார் ரூ. 2.05 கோடி செலவாகும்.

(இ) பள்ளப்பள்ளம் பகுதியில் உள்ள நிலங்களுக்குப் பாசன வசதிக்கு வகை செய்யும் பணி இவ்வேலைத் திட்டத்தில் முதலில் சேர்க்கப்படவில்லை. இப்பணியைச் சேர்ப்பது குறித்து இப்பொழுது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

(உ) கிள்ளியூர் கிராமத்தில் செம்முதலிலும் பிற பகுதிகளிலும் உள்ள நன்செய் ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்காகக் கால்வாய் ஒன்றை வெட்டுவது குறித்துப் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.